**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 20**

**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

---

நாள் : 15.09.2022 - வியாழக்கிழமை (முற்பகல் 10.30 மணி)

இடம்: அல்மன்ஹல் குளிர்மை அரங்கு

---

# தரமான நவீன இலக்கியங்கள் எதிர்கால தலைமுறைக்குத் தேவை: கல்லூரி முதல்வர் இரவிச்சந்திரன் உரை

தரமான நவீன இலக்கியங்கள் எதிர்காலத் தலைமுறைக்குத் தேவை என உருமு தனலெட்சுமி கல்லூரி முதல்வர் முனைவர் இரவிச்சந்திரன் அவர்கள் கூறினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறையில் எம்.சம்சுதீன் அறக்கட்டளைச் சொற்பொழிவு மற்றும் தமிழ்ப் படைப்பிலக்கியம் பன்முக நோக்கு நூல் வெளியீட்டு விழா 15.09.2022 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் உருமு தனலெட்சுமி கல்லூரி முதல்வர் முனைவர் இ.ஆர்.இரவிச்சந்திரன் அவர்கள் இலக்கியங்களில் நவீனப் போக்குகள் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். பெண்களிடம் இருந்தே பலமான சமுதாயம் உருவாகும். இன்றைய சமுதாயத்தில் நவீன இலக்கியங்களின் இன்றியமையாமையை அவர் எடுத்துரைத்தார். திரைத்துறையை சினிமா என்று பாராமல் எப்படி அணுகுவது, அவை நவீன இலக்கியத்துக்கு எவ்வாறு வேறாக உள்ளன என்பதைத் தொல்காப்பியம் மற்றும் திருக்குறள் ஆகிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டினார். ஓர் இலக்கியாவாதி எப்படி உருவானான் என்று கவியரசு கண்ணதாசன், பாரதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டையார் ஆகியோரின் பங்களிப்பினை சிறப்புரையில் முதல்வர் இரவிச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்.

தமிழ்ப் படைப்பிலக்கியம் பன்முக நோக்கு என்ற நூலைக் கல்லூரித் தாளாளர் டாக்டர். அ.கா.காஜா நஜீமுதீன் அவர்கள் வெளியிட்டார். மேலும், நூலாசிரியர்கள் மற்றும் சிறப்பு விருந்தினருக்குச் சிறப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர். எஸ்.இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமை ஏற்றார். கல்லூரி நிர்வாகக் குழுச் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர். அ.கா.காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி எம்.ஜே.ஜமால் முஹம்மது, துணைச் செயலர் முனைவர் க.அப்துஸ் சமது, தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் தேர்வு நெறியாளர் முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு அவர்கள் வரவேற்புரை நல்கினார். முதுகலை மாணவர் பா.ரகுநாத் அவர்கள் நன்றியுரை நவின்றார். தமிழ்த்துறைப் பேராசிரியர் து.பிரபாகரன் அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், ஆய்வாளார்கள், மாணவர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.


ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
GPS Map Camera
Nigeria
Google
Tiruchirappalli, Tamil Nadu, India
7, Race Course Road, Khajanagar, Tiruchirappalli,
Tamil Nadu 620020, India
Lat 10.785888°
Long 78.694992°
15/09/22 11:18 AM GMT +05:30